**செய்தி வெளியீடு எண்: 477** **நாள் : 23.09.2014**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (23.9.2014) தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்தை திறந்தும், கம்பம் நகராட்சியில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளை துவக்கியும் வைத்தார்கள். மேலும், 31 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, 14 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களைத் துவக்கி வைத்து, 55 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நகர்ப்புரங்களில் பெருகி வரும் மக்கட் தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றுதல், நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல், பொது சுகாதாரத்தை பராமரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குதல், மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (23.9.2014) தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்தை திறந்தும், கம்பம் நகராட்சியில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளை துவக்கியும் வைத்தார்கள். இந்தக் குடிநீர் திட்டத்தின் மூலம் கம்பம் பகுதியைச் சேர்ந்த 69,183 மக்கள் பயனடைவார்கள்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 3 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன மொத்த மீன் விற்பனை அங்காடி கட்டடம்; 12 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உக்கடம் பேரூர் புறவழிச்சாலை பிரிவு சந்திப்பு முதல் கோவைபுதூர் வரையிலான 9.7 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலை; கோவைபுதூர் சுண்டக்காமுத்தூர், நொய்யல் ஆற்றின் குறுக்கே 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்;

மதுரை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் 3 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல அலுவலகக் கட்டடங்கள்; நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம், ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் மற்றும் திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி ஆகிய நகராட்சிகளில் 3 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள்; சேலம் மாநகராட்சி – சூரமங்கலம் மண்டலம், அய்யாசாமி தெருவில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவமனை கட்டடம் மற்றும் சூரமங்கலத்தில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடம்;

தருமபுரி, திருப்பூர், வேலூர், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், ஈரோடு, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 16 பேரூராட்சிகளில் 3 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள், நவீன சுகாதார வளாகங்கள், குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மற்றும் வணிக வளாகம்; நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலியில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 31 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கோயம்புத்தூர் மாவட்டம் – ஒடையகுளம் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம் – குன்னத்தூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் – பாண்டமங்கலம் பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் – மண்டைக்காடு பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் பேரூராட்சி ஆகிய 5 பேரூராட்சிகளில் வசிக்கும் 54,592 மக்கள் பயன்பெறும் வகையில் 14 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி மாநகராட்சியில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்ககத்தின் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த 250 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் துவங்குவதற்கு 5 கோடியே 11 லட்சம் ரூபாய் சுழல் நிதியினை வழங்கும் அடையாளமாக 7 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்தும் வகையில் 33 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்ட பெரு வலைதளத்தை (Web Portal – http://cma.tn.gov.in/tnulm) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இந்த வலைதளத்தின் மூலம் திட்டத்தினைப் பற்றி அறிந்து கொள்ளவும், மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் குறித்த விவரங்கள், பெற்ற கடனுதவிகள், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பற்றிய விவரங்கள், அரசின் மூலம் பெற்ற பயன்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற வழிவகைகள் போன்ற விவரங்களை மக்கள் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திறந்தும், துவக்கியும், அடிக்கல் நாட்டியும் வைக்கப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பு 111 கோடியே 70 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்ககத்தின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கவும், குழுக்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும் வகையிலும்

‘‘வல்லமை’’ என்ற பெயரில் புதிதாக வெளிவரும் காலாண்டு செய்தி இதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி, சென்னை மாநகராட்சி மேயர் திரு சைதை சா. துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / சென்னை மாநகராட்சி ஆணையர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு சந்திரகாந்த் பி. காம்ப்ளே, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு சி. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 23.9.2014